## நம்முடைய தலைவர் வழியில் நிற்போம்! தலைவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒன்றிய – மாநில அரசுகளைக் கண்டித்து

# தமிழ்நாட்டின் சிறைகள் நிரம்பும் அளவுக்குப் போராட்டம் நடத்த சித்தமாக இருப்போம்!

## மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் 'நீட்' தேர்வைக் கண்டித்து – மாணவரணியின் மாபெரும் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்து – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சூளுரை!

சென்னை, ஜூன். 26-

**சென்னையில் - ஆளுநர் மாளிகை முன்பு - கழக மாணவரணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்து கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., பேசுகையில் "நம்முடைய தலைவர் வழியில் நிற்போம்! தலைவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒன்றிய - மாநில அரசுகளைக் கண்டித்து தமிழ்நாட்டின் சிறைகள் நிரம்பும் அளவுக்குப் போராட்டம் நடத்த சித்தமாக இருப்போம்!" என்று குறிப்பிட்டார்.**

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆ.இராசா எம்.பி. பேசியதாவது:-

தமிழ்நாட்டில் ஒரு புதிய ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சியில் நடைபெறும் அக்கிரமங்களை, குறிப்பாகத் தமிழ் இனத்திற்கு, தமிழ் மொழிக்கு, எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்து கொண்டிருக்கும் தீங்கைக் கண்டிப்பதற்கு யோக்கியதை இல்லாத ஒரு அரசாங்கம் இங்கே இருக்கிறது. இது பொம்மை அரசாங்கம் தானே!

### சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் சமஸ்கிருதம்!

நம்முடைய டி.கே. சிவக்குமார் கர்நாடகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், "நாங்கள் மேகதாது அணையைக் கட்டுவோம்; இப்போது அங்கே ஸ்டாலின் இல்லை, அதனால் கட்டுவோம்" என்று சொன்னாரே, அப்படிப்பட்ட துணிச்சலோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இல்லை என்பதற்காகத் தொடர்ந்து 'நீட்' என்ற தேர்வை இந்த ஆண்டும் ஒத்திவைத்து மீண்டும் நடத்த இருக்கிறது ஒன்றிய அரசு. சி.பி.எஸ்.இ. என்று சொல்லக்கூடிய ஒன்றிய அரசாங்கத்தின் பள்ளிகளில் இப்போது சமஸ்கிருதத்தையும் சேர்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நண்பர்களே...ஒரு நிமிடம் எண்ணிப் பாருங்கள். "எங்களுக்கு அரசியல் எதிரி திராவிட முன்னேற்றக் கழகம்; கொள்கை எதிரி பா.ஜ.க." என்று சொன்னார் இன்றைக்கு இருக்கும் முதலமைச்சர். "அது பாசிசம் என்றால் இது பாயாசமா?" என்று கேட்டுவிட்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்.

### உங்களுக்கு வெட்கமாகயில்லையா?

நான் கேட்கிறேன்... தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆகிவிட்டீர்கள், எப்படி ஆனீர்கள்? இப்போது விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். "எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, எங்கள் கூட்டணியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி வைத்தோம், ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தீர்கள்" என்று சொன்னார்கள். அதற்கு அவர், "நாங்கள் அவர்களை அமைச்சர்களாக ஆக்கி இருக்கிறோம்" என்று பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களாக ஆக்குவதற்கு உங்களுக்கும் வெட்கமில்லை; அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கும் அந்தக் கட்சிகளுக்கும் வெட்கமில்லை. அரசியலில் வெட்கமில்லாத இரண்டு பேர் சேர்ந்து கொண்டு "நாங்கள் ஆட்சியை நடத்துகிறோம்" என்றால், நாங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்! முதலமைச்சர் அந்த ஸ்கிரிப்ட்டை மட்டும் பார்க்காமல் படிக்கிறார். நேற்று இரவு முழுவதும் ஒத்திகை; மற்றதை எல்லாம் பார்த்துப் படிக்கிறார். சரியாக நம்மைத் திட்டும்போது மட்டும், இரவு முழுவதும் ஒத்திகை. எனக்குக் கிடைத்த தகவல், நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று பார்த்து, மூன்று முறை, நான்கு முறை மனப்பாடம் செய்து, என்னவெல்லாம் சொல்லலாம் என்று...

நான் கேட்கிறேன்... நாங்கள்தான் எங்கள் கூட்டணியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தோம். ஒரு தேர்தல் வரக்கூடாது என்பதற்காக உங்களுக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், அதற்குப் பிறகு "அவர்களுக்கு அமைச்சர் பொறுப்பு கொடுத்திருக்கிறேன் நான்" என்று மார்தட்டிக் கொள்கிறீர்களே, இப்படிச் சொல்லுவதற்கு ஜனநாயகத்தில் உங்களுக்கு வெட்கமாக இல்லையா? போனவர்களுக்குத்தான் வெட்கமில்லை என்றால், உங்களுக்குமா வெட்கமில்லை? இப்படி வெட்கங்கெட்ட ஒரு ஆட்சி இங்கே நடைபெறுகிற காரணத்தினால்தான் மோடிக்கு இந்தத் தைரியம்.

நான் உங்களைக் கேட்கிறேன், "பாசிசம், பாயாசம்?" என்று சொன்னீர்களே... நாங்கள் பாசிசத்தை எதிர்ப்பதற்கு வெறும் மூன்று மாவட்டங்களில் இருந்து 5000 மாணவர்கள் திரண்டிருக்கிறார்கள். பாசிசத்தை நாங்கள் எதிர்க்கிறோம். சட்டமன்றம் இரண்டு முறை கூடிவிட்டது; ஒரே ஒரு தீர்மானம் போட முடிந்ததா? ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்களே, "நாங்கள் மொழித் திரிப்பை ஒப்புக்கொள்ள மாட்டோம், இந்தித் திணிப்பை ஒப்புக் கொள்ள மாட்டோம், சமஸ்கிருதத்தை ஒப்புக்கொள்ள மாட்டோம்" என்று சொன்னீர்களே... இந்த அரசாங்கத்தை எதிர்த்து சட்டமன்றத்தில், "இந்த சி.பி. எஸ்.இ. பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தை நாங்கள் தமிழ்நாட்டில் ஒப்புக்கொள்ள மாட்டோம்" என்று சொல்லும் யோக்கியதை இந்த முதலமைச்சருக்கு உண்டா?



### முதல்வருக்கு தைரியம் உண்டா?

கேட்டால், 'ரீல்டைலாக்'. "ஸ்டாலின் சார்"! யார் அந்த ஸ்டாலின் சார்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் சட்டத்தின் அடிப்படையில், அரசியல் சட்டத்தைச் சொல்லி, "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தில் சொல்லப்படும் கடமைகளை நிறைவேற்றுவேன்" என்று சொன்ன முதலமைச்சர், அதே அரசியல் சட்டத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கும் பிரதமர் அமைச்சரவை சொல்லும் எந்தத் திட்டமாக இருந்தாலும், அது எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்றால், அது EWSஆ? அது வந்தே மாதரமா? மும்மொழிக் கொள்கையா? நீட்ஆ? "எங்களின் இறையாண்மை வேறு; ஒரே நாட்டில் இருக்கிறோம், ஒரே அரசியல் சட்டம்; ஆனால் நாங்கள் டெல்லிக்கு 'Out of control' என்று சொல்லும் ஒரு மாமனிதன்தான் ஸ்டாலின் சார். அந்த ஸ்டாலின் சாரைச் சொல்லிவிட்டு, இன்றைக்கு ஒரே ஒரு வார்த்தை டெல்லியைப் பற்றிக் கேட்பதற்கு இந்த முதலமைச்சருக்குத் தைரியம் உண்டா? இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கையை விட்டுவிடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எது? இன்றைக்குச் சொல்லுகிறார்களே... "நீங்கள் போய் கூட்டணி வைத்திருக்கிறீர்களே". தந்தை பெரியார் எப்படிப்பட்ட கூட்டணி அமைத்தார் தெரியுமா? இந்தத் தமிழுக்காக 1937இல் தொடங்கப்பட்டது இந்த இயக்கம். மறைமலை அடிகள் தூய சைவம் பேசியவர்; "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா" என்று தினந்தோறும் பூசித்தவர். கா.சு. பிள்ளை யார் என்று தெரியுமா? முதன்முதலில் தமிழில் NonBrahmin இல் எம்.எல் முதல் ஆள். அவர் பெரியாருக்கு எதிர்த்தரப்பில் இருந்தார். இப்படியெல்லாம் இருந்த சைவர்களை அழைத்துக் கொண்டுதான், "நீங்கள் சைவம் பேசுகிறீர்கள்; நான் பகுத்தறிவு பேசுகிறேன்; ஆனால் நம் இருவருக்கும் தாய்மொழி தமிழ். இந்தத் தமிழைக் காப்பாற்றுவோம்" என்று1937களில் துவங்கப்பட்ட இயக்கம்.

### சோபா செட் டப்பாவுக்கு வரலாறு தெரியுமா?

அந்தப் பாரம்பரியத்தில் வந்த நாங்கள், அண்ணாவால், கலைஞரால், பெரியாரால், அதற்குப் பிறகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மாமனிதருக்குப் பின்னால் நின்று கொண்டு, நாங்கள் மொழிக்காகப் போராடுகிறோம். முதலமைச்சர் அவர்களே, இப்படிப் பேசுகிற யோக்கியதை, உங்களுக்கு அல்ல; உங்களிடத்தில் இருக்கும் எந்த சோபா செட் டப்பாவிற்காவது இருக்கிறதா? இந்த வரலாறு தெரியுமா? தெரியாது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் பாசிசத்தை எதிர்ப்பது உண்மையாக இருந்தால், பாசாங்கு செய்யாமல், நடிக்காமல், கேமராவுக்கு முன் நிற்பதாக எண்ணிக்கொள்ளாமல், தமிழ்நாட்டின் உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டுமானால், உடனடியாகச் சட்டமன்றத்தைக் கூட்டி நீங்கள் தீர்மானம் இயற்றத் தயாரா? இல்லை.

### சிறைகளை நிரப்புவோம்!

மோடிக்கு வருகிறேன்... "தமிழ்நாட்டில் நீட் தேர்வை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்" என்று தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் போடுகிறது. நாடாளுமன்றம் "நீட் தேர்வு வேண்டும்" என்று தீர்மானம் போடுகிறது. 140 கோடி மக்கள் இருக்கும் நாடாளுமன்றத்தில் எதைக் கொண்டு வருகிறார்களோ, அதை "8 கோடி மக்கள் வாழும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று சொல்லும் ஆற்றல் தமிழ்நாட்டுக்கு மட்டும்தான் உண்டு! இந்தியாவில் வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லை. அதற்குக்காரணம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மாமனிதர். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலையை உங்களால் எடுக்க முடியுமா?

அதேபோன்று, இன்றைக்குச் சமஸ்கிருதத் திணிப்பு. ஏன் சமஸ்கிருதத்தை எதிர்க்கிறோம்? ஆரியம், திராவிடம் என்று பேசுகிறார்களே... இந்தியாவில் இரண்டே இரண்டு பண்பாடுதான்.. சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு விந்திய மலைக்கு அப்பால் இருக்கிற வடமாநிலங்கள்; சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொள்ளாமல் தமிழைக் கொண்டிருக்கும் கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், "தாயே தமிழே உதிரத்தே குதித்தெழுந்தே" என்று சொல்கிறோமே, இந்த மாநிலங்கள் சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொள்ளாது. சமஸ்கிருதம் நான்கு வர்ணங்களைச் சொல்லுகிறது; தமிழ் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொல்கிறது. சமஸ்கிருதம், பெண்ணை படிக்காதே என்று சொல்கிறது; தமிழ், அந்தக்காலத்திலேயே 'சாதி இரண்டொழிய வேறில்லை', பெண்கள் படிக்க வேண்டும் என்று சொன்ன மொழி. எனவே, மொழியால், கலாச்சாரத்தால், பண்பாட்டால், நிலப்பரப்பியலால் நாங்கள் திராவிடர்கள் என்று இப்போது அல்ல, அப்போதே நாங்கள் நிரூபித்தோம்; இன்றைக்கும் அது தொடர்கிறது.

நான் மோடி அவர்களுக்குச் சொல்கிறேன்...திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லை என்று டி.கே. சிவகுமாரைப் போன்று நீங்களும் கொக்கரித்தால், எங்கள் தலைவரின் அனுமதியைப் பெற்று விரைவில் மாணவர் அணியும், இளைஞர் அணியும் தமிழ்நாட்டின் சிறைகளை ஒட்டு மொத்தமாக நிரப்ப முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியில் இருக்கிறபோது எங்களுக்கு இருக்கிற அடக்கம், ஆளுங்கட்சியாக இருக்கிறபோது எங்களுக்கு இருக்கின்ற அமைதி, எதிர்க்காட்சியாக இருக்கிறபோது அந்தச் சகிப்புத்தன்மை, அந்த அடக்கம், அமைதி இருக்குமா என்று எங்களால் சொல்ல முடியாது. தலைவர் எங்களைக் கட்டுப்படுத்தலாம்; ஆனால் இந்த வயதில் கூடத் தியாகம் செய்வதற்கு முன்வருகிறோம் என்றால், என்றைக்கும் இந்த இனத்தையும் மொழியையும் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு எங்களிடத்தில் இருக்கிறது.

### என்ன கிழிக்கப் போகிறாய்!

எனவே, இன்றைக்குத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டம், மோடி அரசாங்கத்திற்கு எதிரானது மட்டுமல்ல; அந்த மோடி அரசாங்கத்திற்கு மௌனம் காத்து முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறதே இந்தச் சோபா செட் அரசாங்கத்திற்கும் சேர்த்துதான். முதலமைச்சருக்குத் தைரியம் இருந்தால், முதலமைச்சருக்கு உள்ளபடியே மொழியின் மீதும், இனத்தின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் அக்கறை இருந்தால், எப்போது பார்த்தாலும் பழைய ஆட்சியைக்குறை சொல்லிக்கொண்டே, குறை சொல்லித் தானே ஆட்சிக்கு வந்தீர்கள்; வந்த பிறப்பாடு "நீ என்ன கிழிக்கப் போகிறாய்" என்று சொல்லுங்கள்!

ஒரு அரசியல் கட்சி ஆட்சி மாற்றத்திற்கு வருகிறபோது தேர்தல் நேரத்தில் குறை சொல்வார்கள். உண்மையா, பொய்யா? அதெல்லாம் பிறகுதான். இந்திரா காந்தி இறந்தவுடனும்தான் எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை; ராஜீவ் காந்தி இறந்தவுடனும்தான் எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை; எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் இருக்கும்போதும் எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை. அதெல்லாம் உணர்ச்சி வசப்பட்டுப் போட்டார்கள். ஆனால், அதற்காகத் திரும்பவும் இந்திராகாந்தியைச் சாகடிப்பீர்களா? திரும்பவும் எம்.ஜி.ஆரை மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டுமா? லூசுகளா நீங்களெல்லாம்? உண்மையா, பொய்யா என்று சட்டமன்றத்தில் சொல்; ஆனால் வந்ததற்குப் பிறகு, பாசிசத்தை எதிர்த்து என்ன செய்யப் போகிறாய்? என்று சொல்!

உங்கள் கொள்கைத் தலைவர்களாக தந்தை பெரியார், காமராஜர், வேலுநாச்சியார் ஆகியோரை நீங்கள் வைத்திருக்கிறீர்களே... நான் சொல்லட்டுமா, எனக்குச் சந்தேகம் இருக்கிறது. சாதியை ஒழிக்க அல்ல; தமிழை வளக்க அல்ல; இந்தத் தலைவர்களையெல்லாம் சாதிக்குள் அடக்க வேண்டும் என்பதற்காக, அந்தச் சாதி வாக்குகளைப் பெறலாம் என்பதற்காக இதெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்களா நீங்கள் என்று கேட்க மாட்டார்களா?

### மிகப்பெரிய போராட்டம்!

எனவேதான் சொல்லுகிறேன்... இந்த மண் திராவிட மண், தமிழ் மண். பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் பண்படுத்திய இந்த மண்ணில், இன்றைக்குக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கும், கல்லூரியை விட்டுச் சற்றே வெளி வந்திருக்கும் அன்பிற்குரிய மாணவக் கண்மணிகளே, இளைஞர்களே! நம்முடைய தலைவர் வழியிலே நிற்போம். தலைவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு விரைவில் ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து, மாநில அரசாங்கத்தை எதிர்த்து, தலைவர் அனுமதித்தால் இதைவிட இன்னும் பெரிய போராட்டத்தை நாடு தழுவிய அளவில், தேவைப்பட்டால் தமிழ்நாட்டின் சிறைகள் முழுவதும் நிரம்பும் அளவில், தலைவருடைய அனுமதியைப் பெற்று நடத்துவதற்கு நாம் சித்தமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, இந்த அருமையான ஏற்பாட்டைச் செய்திருக்கும் அத்தனை மாணவர் அணி நிர்வாகிகளையும், தலைமைக் கழகத்தின் சார்பில், தலைவரின் சார்பில் உங்களைப் பாராட்டி, வணங்கி, விடை பெற்று, இதை நான் தொடங்கி வைக்கிறேன்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. உரையாற்றினார்.

---

# போராட்டக் களமாகிறது விவசாயிகளின் விளைநிலங்கள்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன். 26–

பயிர்க்கடன் தள்ளுபடி, மேகதாது உள்ளிட்ட விவகாரத்தால் தமிழக அரசுக்கெதிராக போராட்டத்தை விவசாயிகள் தீவிரப்படுத்தி உள்ளதால் விவசாயிகளின் விளை நிலங்கள் போராட்டக் களமாக மாறியுள்ளதாக "தினகரன் நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்

ஜூன் 25, 2026 வியாழக்கிழமை

போராட்ட களமாகிறது!

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்று நிலுவை வைத்துள்ள விவசாயிகளின் உத்தேச கடன் தொகையான ரூ.5,932.23 கோடியை தள்ளுபடி செய்வதற்கான அரசாணையை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. இதில், பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அது வருமாறு:–

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்று நிலுவை வைத்துள்ள விவசாயிகளின் உத்தேச கடன் தொகையான ரூ.5,932.23 கோடியை தள்ளுபடி செய்வதற்கான அரசாணையை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. இதில், பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. 75 ஆயிரம் ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயி களுக்கு 100 சதவீத கடன் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேலும், 75 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக கடன் பெற்ற விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 35 ஆயிரம் ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்பட உள்ளது. இதன்மூலம், கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் குறைந்தபட்சம் ரூ.35 ஆயிரம், அதிகபட்சம் ரூ.75 ஆயிரம் வரை பணப் பயன் கிடைக்கும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

1.5.2025க்கு முன்னர் பெற்ற கடன்களுக்கும், 28.2.2026 அன்றைய நிலுவைக்கு பின் அரசாணை வெளியிடுவதற்குள் முழுமையாக திருப்பி செலுத்தப்பட்ட கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தாது என்பது உள்பட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி என்பது வெறும் ஏமாற்று வேலையாகவே உள்ளது.

கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், தமிழக அரசு தள்ளுபடி செய்த பயிர்க்கடன் தொகை ரூ.12,110 கோடி. ஆனால், தற்போது தமிழக அரசு தள்ளுபடி செய்துள்ள பயிர்கடன் தொகை வெறும் ரூ.5,932.23 கோடி மட்டுமே. இது, யானை பசிக்கு சோளப்பொறி போன்று உள்ளது. கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதுதான் விவசாயிகளின் ஒற்றை கோரிக்கை. இதை முன்வைத்து விவசாயிகள் தமிழ்நாடு முழுவதும் உணர்வுப்பூர்வமாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆனால், இதை கொச்சைப்படுத்தும் வகையில் தமிழக முதல்வர் விஜய், எதிர்க்கட்சிகளின் தூண்டுதலின்பேரில்தான் விவசாயிகள் போராட்டம் நடத்துகின்றனர் என விமர்சனம் செய்துள்ளார். முதல்வரின் பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிப்பும், கொச்சைத்தனமான பேச்சும் எங்களை கடும் கோபத்துக்கு உள்ளாக்குகிறது என விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஒருபுறம் பயிர்க்கடன் தள்ளுபடியில் அநீதி இழைக்கப்படும் நிலையில், மற்றொருபுறம் டெல்டா விவசாயம் பாலைவனமாக மாறிவிடும் அபாயம் எழுந்துள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகா அரசு, காவிரி நீரை ஒட்டுமொத்தமாக தடுக்கும் வகையில் மேகதாது அணை கட்டியே தீருவோம் என ஒற்றைக்காலில் நிற்கிறது. இந்த விஷயத்தில் தமிழக அரசின் எதிர்ப்பு என்பது ஆமை வேகத்தில் உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் போதாது.

சட்டப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில், வெறும் சட்டமன்ற தீர்மானம் எந்த வகையிலும் பலன் அளிக்காது. மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என்பதில் முந்தைய தி.மு.க. அரசு உறுதியாக இருந்தது. ஆனால், தற்போதைய தவெக அரசு தடுமாறுகிறது. புதிய நடுவர் மன்றத்தை நாடுவது, கண்டன தீர்மானம் நிறைவேற்றுவது என்பது எந்த வகையிலும் பலன் தராது.

எனவே, முந்தைய தி.மு.க. அரசுபோல் தற்போதைய தவெக அரசும் உறுதியாக இருக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பயிர்க்கடன் தள்ளுபடி, மேகதாது உள்ளிட்ட விவகாரத்தால் தமிழக அரசுக்கு எதிராக போராட்டத்தை தீவிரப்படுத்தி உள்ளதால் விவசாயிகளின் விளைநிலங்கள் போராட்ட களமாக மாற தொடங்கி உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## சென்னையில் அடுத்தடுத்து கொலை சம்பவங்கள் - மக்கள் அதிர்ச்சி!

# சென்னை தியாகராயர் நகரில் இரட்டைக் கொலை!

## த.வெ.க. ஆட்சியில் கொலை நகரமான தலைநகரம்!

*சென்னை, ஜூன். 26-*

*தலைநகர் சென்னையில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது*

*சென்னை வடபழனியில் சாலையில் சுயநினைவின்றி ஒருவர் விழுந்து கிடப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, ஆம்புலனஸ் ஊழியர்கள் அவரை, பரிசோதனை செய்தனர். அப்போது, அந்த நபர் ஏற்கனவே உயிரிழந்தது தெரிய வந்தது. விசாரணையில் அவர் கொலை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டது.*

*கொல்லப்பட்டவர் கண்ணம்மாபேட்டையைச் சேர்ந்த ராஜேந்திரன் ஆவார். பாண்டி பஜார் உள்ள மதுபானக் கடையில் ஏற்பட்ட தகராறில் ராஜேந்திரனை, பாலாஜி என்பவர் தலையில் கடுமையாக தாக்கியுள்ளார்.*

*இதில் காயமடைந்த ராஜேந்திரன் வீட்டிற்கு செல்லும் வழியில் உயிரிழந்ததாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.*

*தியாகராயர் நகரில் திருமண மண்டப ஊழியர் ரவிக்குமார் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் மணி என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர்.*



கழக சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன்,எழும்பூர் தெற்கு பகுதி, 58வது (அ) வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் T.ராஜ்குமார் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்கள் செல்வி.T. விசாலி செல்வன் v.யுவராஜ் இணையரை வாழ்த்தினார்.